**செய்தி வெளியீட்டு எண்–117** **நாள்: 4.2.2010**

<u>பத்திரிக்கை செய்தி</u>

பொது மக்கள் எவ்விதத்திலும் சுரண்டப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படவும் ஒரு நல்ல நுகர்வோராக தங்களது உரிமைகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றை குறித்து விழிப்புணர்வை உருவாக்கவும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு அரசு 1000 பள்ளிகளிலும் 500 கல்லூரிகளிலும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களை உருவாக்கியுள்ளது. இளைஞர்களை ஒன்று திரட்டி நுகர்வோர் உரிமைகளை குறித்த ஒரு உத்வேகத்தை உருவாக்கவும் தங்கள் உரிமைகளை பாதுகாப்பதில் பொதுமக்களுக்கு உரிய அறிவினை பகிர்ந்து கொள்ளவும் நாட்டில் நுகர்வோர் இயக்கத்தை வலுப்படுத்தவும் வேண்டுமென்பதே குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களின் நோக்கமாகும். விழிப்புணர்வை ஏற்படுத்துதலின் ஒரு பகுதியாக சென்னை மாநகரத்திலுள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் இயங்கும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களின் மாவட்ட அளவிலான நுகர்வோர் திருவிழா சென்னை 8, எழும்பூர், எத்திராஜ் சாலையில் உள்ள எத்திராஜ் மகளிர் கல்லூரியில் 06/02/2010 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும். இதில் பங்கு பெறுவோர் நுகரியல் தொடர்புடைய அனைத்து பிரிவுகளிலும் போதிய கல்வியறிவு பெற வேண்டும் என்ற நோக்கோடு இந்த நுகர்வோர் திருவிழாவினை அரசு ஏற்பாடு செய்துள்ளது.

பள்ளி மற்றும் கல்லூரி குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களிடையே போட்டிகள் நடைபெறும்.

| | |
|---|---|
| பள்ளிகள்: | கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, சுவரொட்டி தயாரித்தல் மற்றும் அரங்கு பராமரித்தல் |
| கல்லூரிகள்: | மாதிரி நீதிமன்றம், டீ – ஷர்ட் வடிவமைத்தல் மற்றும் ஒரு நிமிடம் |
| பணியாளர்களுக்கு : | நெருப்பின்றி சமைத்தல் |

இந்நிகழ்ச்சிகளில் பங்கு பெற விரும்புவோர் மேலும் விவரங்களை பெற 91766 86420 அல்லது 96772 30970 ஆகிய செல்லிடைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம். நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பாக மாணவர்கள், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் பொருட்காட்சியும் இடம் பெற்றுள்ளது.

மேலும் நுகர்வினை நிர்ணயிப்பது தேவையா ! வசதியா ! என்ற விவாதமும் அரசுத் துறைகள் மற்றும் தன்னார்வ நுகர்வோர் அமைப்பினரால் செயல்முறை விளக்கங்களும் செய்து காட்டப்படும். இதனை தொடர்ந்து குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986ல் வரையறை செய்யப்பட்டுள்ள நுகர்வோரின் உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றை குறித்து மாணவ சமுதாயத்திடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நுகர்வோர் திருவிழாவின் நோக்கமாகும்.

நுகர்வோர் நடவடிக்கைகள் தொடர்பாக மேலும் விவரங்கள் அறிய 98402 87097, 99404 16196, 94444 34359 மற்றும் 98401 51157 ஆகிய செல்லிடைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம்.

அனைத்து கல்வி நிலையங்களின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், தன்னார்வ நுகர்வோர் அமைப்பினர் மற்றும் பொது மக்கள் அனைவரும் வருகை புரிந்து பொருட்காட்சி மற்றும் போட்டிகளை கண்டு களிக்க வரவேற்கப்படுகிறார்கள்.

அரசு முதன்மை செயலாளர்.

* * * * * *

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.